**செய்தி வெளியீடு எண்: 663** **நாள்: 6.11.2012**

**<u>“மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் மீன்துறைத் திட்டப்பணிகள் ஆய்வு”</u>**

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையின் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் சென்னை தேனாம்பேட்டை டி எம் எஸ் வளாகத்தில் 5.11.2012 அன்று **மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.ஏ.ஜெயபால்** அவர்கள் தலைமையில் **திரு.ககன்தீப் சிங் பேடி இ ஆ ப., அரசு செயலர், கால்நடை பராமரிப்பு பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, திரு ச. முனியநாதன், இ.ஆ ப ., மீன்துறை இயக்குநர்** அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மை பொறியாளர் (மீன்பிடித் துறைமுக திட்டங்கள் வட்டம்) சென்னை தலைமை அலுவலக மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள், மீன்துறை உதவி இயக்குநர்கள் மற்றும் மாவட்ட மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள், மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மீன்வளத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கடல் மீனவர் நலத்திட்டங்களான தேசிய மீனவர் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டம், மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டம், மீன்பிடிப்பு குறைந்த பருவமழை காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டம், பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திர மயமாக்குதல் திட்டத்தின் கீழ் உட்பொருத்தும் வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்கிட மானியம் வழங்கும் திட்டம், மீனவர் இலவச வீட்டு வசதி திட்டம், இணையதளத்தின் வாயிலாக மீன்பிடி கலன்களை பதிவு செய்தல், மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் திட்டம் போன்றவையுடன் உள்நாட்டு மீன்வளத்தில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் , தேசிய மீன்வள மேம்பாட்டு வாரிய திட்டங்கள், நீர்வள நிலவள திட்டங்கள், மீன்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் மீன்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மீன்பிடிதுறை முகங்கள் / மீன் இறங்கு தளங்கள் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திடவும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் ஒவ்வொரு மாவட்டமாக ஆய்வு செய்து, அரசின் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்திட ஆலோசனை வழங்கினார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**